# HSBC லை.்.ப்ஸ்டைல் கடன் விண்ணப்பப் படிவம்

| அலுவலகப் பாவனைக்கு மட்டும் - LSL001706 (T) | |
|---|---|
| கிளை/DSS குறியீடு | |
| அலுவலரின் பெயர் | |
| அலுவலரின் அடையாள இல. | |
| அலுவலரின் தொலைபேசி இல. | |

விண்ணப்பத்தை நிரப்பும்போது பொருத்தமான இடங்களில் அடையாளமிடவும்.

## விண்ணப்பத்தின் வகை

☐ தனிப்பட்ட கடன் ☐ கார் கடன் (HSBC லை.்.ப்ஸ்டைல் கார் கடனுக்கான மேலதிக ஆவணங்கள் பிரிவு 1ஐ இணைக்கவும்)

☐ தனி விண்ணப்பதாரர் ☐ கூட்டு விண்ணப்பதாரர்

☐ புதிய வாடிக்கையாளர் ☐ தற்போதய வாடிக்கையாளர் - கணக்கு இலக்கம் / கிறெடிட் கார்ட் இலக்கம் …………

☐ சம்பளம் பெறுபவர் ☐ சுய தொழில் (உரிமையாளர்/பங்காளி/வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம்)

☐ வைத்தியர் திட்டம் ☐ கல்விக் கடன் திட்டம்

☐ நிறுவன ஊழியர் முன்னுரிமைத் திட்டம் (CEPS)

☐ HSBC அலுவலர்கள் ☐ உலகளாவிய சேவை நிலைய அலுவலர்கள் (GSC)

☐ வேறு (தயவுசெய்து குறிப்பிடவும்)

## தேவையான ஆவணங்கள்

உங்கள் விண்ணப்பம் பரிசீலிக்கப்படுவதில் தாமதத்தைத் தவிர்க்க, விண்ணப்பத்தைப் பூரணமாக நிரப்பி, கீழே பட்டியலிடப்பட்டுள்ள சகல சான்று ஆவணைங்களையும் இணைத்துச் சமர்ப்பிக்கவும். வங்கி தனது தற்றுணிபிற்கேற்ப தேவையான ஆவணங்களை மாற்றக்கூடும்.

## ஆளடையாளச் சான்று

☐ தேசிய அடையாள அட்டை (தே.அ.அ.) ☐ கடவுச்சீட்டு ☐ சாரதி அனுமதிப்பத்திரம் (சா.அ.)

☐ பிறப்புச் சான்றிதழ் ☐ திருமணச் சான்றிதழ் ☐ சத்தியக் கடதாசி

வாடிக்கையாளரின் ஒப்பம்

## வசிப்பிட முகவரிக்கான சான்று

1. உங்கள் விண்ணப்பத் திகதிக்கு முந்திய 3 மாதங்களுக்குள் வழங்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பொதுவசதிக் கட்டணப் பட்டியல் (மின்சாரம்/தொலைபேசி/நீர் கட்டணப் பட்டியல், வங்கி விபரக்கூற்றுகள், வங்கிக் கணக்குப் புத்தகம், வருமான வரிக் கடிதம், கிராம சேவையாளரின் கடிதம் அல்லது பணம் செலுத்தும் தொலைபேசிச் சேவை அறிக்கை)
2. தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் (தற்போதய ர்ளுடீஊ வாடிக்கையாளர்களுக்கு மட்டும் - தே.அ.அ. முகவரியும் தற்போது வங்கியிடமுள்ள முகவரியும் ஒன்றாக இருக்க வேண்டும்).

   □ தற்போதய HSBC வாடிக்கையாளர்

## சம்பளம் பெறுபவர் தொடர்பில் தேவைப்படும் பொதுவான நிதி ஆவணங்கள்

1. குறைந்தபட்சம் கடந்த 3 மாதங்களுக்கான சம்பளச் சிட்டைகள் மற்றும் வங்கி விபரக்கூற்றுகள் (கடன் வழங்குவது பற்றிப் பரிசீலக்க, 06 மாதங்களுக்கான மாறக்கூடிய படிகள் பற்றிய விபரம் வங்கிக்குத் தேவைப்படும்).
2. அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரின் கையொப்பத்துடன் (பிரிவு “G” இல் இணைக்கப்பட்டுள்ள மாதிரிக் கடிதத்திற்கு அமைவாக) தொழில் வழங்குநரினால் வழங்கப்பட்ட கடிதம்.
3. ஒப்பந்த அடிப்படையிலான தொழிலெனின், ஒப்பந்தம் முன்னர் புதுப்பிக்கப்பட்டிருந்தால் எத்தனை தடவைகள் புதுப்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடப்பட வேண்டும்.
4. ஒப்பந்த அடிப்படையிலான தொழிலெனின், புதுப்பிக்கப்பட்ட மற்றும் முன்னைய ஒப்பந்தங்களின் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## சுயதொழில் செய்வோர் தொடர்பில் தேவைப்படும் பொதுவான நிதி ஆவணங்கள் (தற்போதய வாடிக்கையாளர்களுக்கு மட்டும்)

**நிறுவன வாடிக்கையாளர்கள்**

1. வியாபாரப் பதிவுச் சான்றிதழ்
2. வியாபாரத்தின் கடந்த 3 மாதங்களுக்கான வங்கி அறிக்கைகள் (வரவுத் தொகை அறிக்கைகள்)
3. வியாரத்தின் பதிவு செய்யப்பட்ட முகவரி*
4. பணிப்பாளர்களின் விபரங்கள்*

* 3 மற்றும் 4 தொர்பில் கம்பனிகள் பணிப்பாளர் வழங்கிய சான்றிதழ்களைச் சமர்ப்பிக்கவும்.

வாடிக்கையாளரின் ஒப்பம்

**தனிப்பட்ட வாடிக்கையாளர்கள்**

1. வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி (உரிமையாளர்/பங்காளி)
2. கடந்த 3 மாதங்களுக்கான தனிப்பட்ட வங்கி அறிக்கைகள்

கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள், வரி அறிக்கை, ஒப்பந்தங்கள் / உடன்படிக்கைகள் என்பன உட்பட வருமானத்தை நிரூபிப்பதற்கான ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும்.

**ஏனைய திட்டங்கள் - தேவையான ஆவணங்கள்**

| | |
|---|---|
| வைத்தியர் திட்டம் | ☐ மருத்துவ மன்ற அடையாள அட்டை அல்லது SLMC புதுப்பித்தல் சான்றிதழ் அல்லது மருத்துவ மன்ற பதிவுச் சான்றிதழ் தரப்படுத்தல் கடிதம் |
| கல்விக் கடன் திட்டம் | ☐ மாணவர் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான கடிதமும் கற்கை நெறிக் கட்டண விபரங்களும். |

**பிரிவு A - விண்ணப்பதாரரின் விபரங்கள்**

| பிரதான விண்ணப்பதாரர் | கூட்டு விண்ணப்பதாரர் |
|---|---|
| திரு. திருமதி செல்வி டொக்டர் வேறு (குறிப்பிடவும்) ............. | திரு. திருமதி செல்வி டொக்டர் வேறு (குறிப்பிடவும்) ............. |
| முழுப் பெயர்: | முழுப் பெயர்: |
| பிரதான பெயர்: | பிரதான பெயர்: |
| பால் ☐ ஆண் ☐ பெண் | பால் ☐ ஆண் ☐ பெண் |
| விரும்பப்படும் பெயர்: | விரும்பப்படும் பெயர்: |
| முன்னைய அல்லது வேறு பெயர்கள்: | முன்னைய அல்லது வேறு பெயர்கள்: |
| பிறந்த திகதி: திதி/மாமா/வவவவ | பிறந்த திகதி: திதி/மாமா/வவவவ |
| பிறந்த இடம்: | பிறந்த இடம்: |
| வசிக்கும் நாடு: | வசிக்கும் நாடு: |
| தேசிய இனம்: | தேசிய இனம்: |
| பல்தேசிய உரிமை: ☐ இல்லை ☐ ஆம்<br>ஆமெனின், எவையெனக் குறிப்பிடவும் | பல்தேசிய உரிமை: ☐ இல்லை ☐ ஆம்<br>ஆமெனின், எவையெனக் குறிப்பிடவும் |
| தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கம்:<br>வழங்கப்பட்ட திகதி: திதி/மாமா/வவவவ<br>காலாவதியாகும் திகதி: திதி/மாமா/வவவவ | தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு இலக்கம்:<br>வழங்கப்பட்ட திகதி: திதி/மாமா/வவவவ<br>காலாவதியாகும் திகதி: திதி/மாமா/வவவவ |
| விவாக நிலை:<br>☐ திருமணமானவர் ☐ திருமணமாகாதவர்<br>☐ தாரமிழந்தவர்<br>☐ விவாகரத்துப் பெற்றவர்/வேறு | விவாக நிலை:<br>☐ திருமணமானவர் ☐ திருமணமாகாதவர்<br>☐ தாரமிழந்தவர்<br>☐ விவாகரத்துப் பெற்றவர்/வேறு |
| | பிரதான விண்ணப்பதாரருடனான உறவுமுறை |

வாடிக்கையாளரின் ஒப்பம்

| | |
|---|---|
| நான் அல்லது எனது குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லது வியாபாரத் தொடர்பாளி / வியாபாரத் பங்காளி ஒருவர் (அரசாங்க, நீதி பரிபாலன், பொலிஸ் அல்லது படைத்துறையில்) சிரேஷ்ட பொதுநிலைப் பதவியை வகிக்கிறேனா (வகிக்கிறார்?)<br>☐ ஆம் ☐ இல்லை<br>ஆமெனின், தயவுசெய்து உறவின் தன்மையை விபரிக்கவும் | நான் அல்லது எனது குடும்ப அங்கத்தவர் ஒருவர் அல்லது வியாபாரத் தொடர்பாளி / வியாபாரத் பங்காளி ஒருவர் (அரசாங்க, நீதி பரிபாலன், பொலிஸ் அல்லது படைத்துறையில்) சிரேஷ்ட பொதுநிலைப் பதவியை வகிக்கிறேனா (வகிக்கிறார்?) *<br>☐ ஆம் ☐ இல்லை<br>ஆமெனின், தயவுசெய்து உறவின் தன்மயை விபரிக்கவும் |
| HSBC யில் உமது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவர் அல்லது உறவினர் பணிப்பாளராக அல்லது ஊழியராக உள்ளாரா?*<br>☐ ஆம் ☐ இல்லை<br>பதவி நிலைப் பெயர் : | HSBC யில் உமது கிட்டிய குடும்பவுறுப்பினரொருவர் அல்லது உறவினர் பணிப்பாளராக அல்லது ஊழியராக உள்ளாரா?*<br>☐ ஆம் ☐ இல்லை<br>பதவி நிலைப் பெயர் : |
| வாழ்க்கைத் துணைவரின் பெயர்: | வாழ்க்கைத் துணைவரின் பெயர்: |
| தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை: | தங்கியிருப்பவர்களின் எண்ணிக்கை: |

| | |
|---|---|
| தற்போதய வசிப்பிட முகவரி<br><br>இம் முகவரியில் வசிப்பது திதி/மாமா/வவவவ தொடக்கம்<br>ஆண்டுகளின் எண்ணிக்கை: ……… வருடங்கள் ……… மாதங்கள் | வீட்டுரிமை:<br>☐ சொந்த வீடு<br>☐ வாடகை வீடு<br>☐பெற்றோரின் வீடு<br>☐ கம்பனி வழங்கிய வீடு<br>☐ வேறு |
| வசிப்பிடத்தின் நிலையான தொலைபேசி இலக்கம்:<br>கைத்தொலைபேசி – பிரதான விண்ணப்பதாரர்:<br>கைத்தொலைபேசி – கூட்டு விண்ணப்பதாரர்:<br>மின்னஞ்சல் முகவரி: | விரும்பப்படும் மொழி:<br>பேச்சு: ☐ ஆங்கிலம் ☐ சிங்களம் ☐ தமிழ்<br>எழுத்து: ☐ ஆங்கிலம் ☐ சிங்களம் ☐ தமிழ் |

| |
|---|
| தற்போதய வசிப்பிட முகவரியில் வசிப்பது 3 வருடங்களுக்குக் குறைவெனின், உங்கள் முன்னைய வசிப்பிட முகவரியைக் குறிப்பிடவும்.<br><br>திதி/மாமா/வவவவ முதல் இந்த முகவரியில் வசித்தேன். |
| நிரந்தர முகவரி (தற்போதய முகவரிக்குச் சமமானதெனின், ‘‘மேலுள்ளவாறு’’ என்று குறிப்பிடவும். |
| உங்களுடன் தொடர்பு கொள்வதற்கு நீங்கள் விரும்பும் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடவும். உங்கள் கடன் வசதி தொடர்பான மாதாந்தக் கடிதத்தொடர்பு இந்த முகவரிக்கே அனுப்பப்படும்.<br><br>☐ வசிப்பிட முகவரி ☐ நிரந்தர முகவரி ☐ அலுவலக முகவரி (ஒன்றைத் தெரிவுசெய்யவும்)<br>☐ கைத்தொலைபேசி இலக்கம் ☐ வசிப்பிடத்தின் நிலையான தொலைபேசி இலக்கம் ☐ அலுவலகத் தொலைபேசி இலக்கம் (ஒன்றைத் தெரிவுசெய்யவும்) |

வாடிக்கையாளரின் ஒப்பம்

உங்களுடன் வசிக்காத உங்கள் உறவினர் ஒருவரின் விபரங்களைத் தெரிவிக்கவும். உங்களுடன் தொடர்புகொள்ள எமக்கு அவசியமேற்படின், இந்த நபரின் விபரங்களை நாம் பயன்படுத்துவோம் என்பதால், தயவுசெய்து அந்த நபருக்கு இது பற்றி அறிவிக்கவும்.

முழுப் பெயர்:

பிரதான விண்ணப்பதாரருடனான உறவுமுறை:

வசிப்பிட முகவரி:

வசிப்பிட நிலையான தொலைபேசி இலக்கம்:

கைத்தொலைபேசி இலக்கம்:

அலுவலகத் தொலைபேசி இலக்கம்:

மின்னஞ்சல் முகவரி:

## பிரிவு B - கல்வி.்.தொழில் தகைமைகள்ழு

| | |
|---|---|
| ☐ முதுநிலைப் பட்டதாரி ☐ பட்டதாரி<br>☐ டிப்ளோமா ☐ பட்டதாரி மாணவர்<br>☐ இடைநிலை/உயர் பாடசாலை<br>☐ தொழில் தகைமை<br>☐ வேறு (எதுவெனக் குறிப்பிடவும்) ………… | ☐ முதுநிலைப் பட்டதாரி ☐ பட்டதாரி<br>☐ டிப்ளோமா ☐ பட்டதாரி மாணவர்<br>☐ இடைநிலை/உயர் பாடசாலை<br>☐ தொழில் தகைமை<br>☐ வேறு (எதுவெனக் குறிப்பிடவும்) ………… |

## பிரிவு C - உங்கள் தொழில் பற்றிய விபரங்கள்

| | | | |
|---|---|---|---|
| தொழில் வழங்குநரின் பெயர்: | | தொழில் வழங்குநரின் பெயர்: | |
| அலுவலக முகவரி | | அலுவலக முகவரி | |
| அலுவலகத் தொலைபேசி இலக்கம்: | | அலுவலகத் தொலைபேசி இலக்கம்: | |
| வியாபாரத்தின் தன்மை: | | வியாபாரத்தின் தன்மை: | |
| பதவியின்/தொழிலின் பெயர்: | | பதவியின்/தொழிலின் பெயர்: | |
| தற்போதய மாதச் சம்பளம்<br>மொத்தம்:<br>ஏனைய வருமானம்:<br>ஏனைய வருமான வழி: | | தற்போதய மாதச் சம்பளம்<br>மொத்தம்:<br>ஏனைய வருமானம்:<br>ஏனைய வருமான வழி: | |
| தற்போதய தொழிலில்/வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆண்டுகள்: | | தற்போதய தொழிலில்/வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஆண்டுகள்: | |
| முன்னைய தொழில் வழங்குநர்களின் பெயர்கள்/முகவரிகள் | சேவை புரிந்த ஆண்டுகள் | முன்னைய தொழில் வழங்குநர்களின் பெயர்கள்/முகவரிகள் | சேவை புரிந்த ஆண்டுகள் |
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |

வாடிக்கையாளரின் ஒப்பம்

## ஏனைய வங்கிகளுடனுள்ள தொடர்புகள் (சேமிப்பு, நடைமுறை, நிலையான வைப்பு, கடன், கிறெடிட் கார்ட், மேலதிகப் பற்று)

| வங்கி | வசதி/மீதி | வங்கி | வசதி/மீதி |
|---|---|---|---|
| 1. | | 1. | |
| 2. | | 2. | |
| 3. | | 3. | |

## பிரிவு D – கடன் விபரங்கள்

| | |
|---|---|
| தேவையான கடன் தொகை<br>ரூ. ……………………………………………………...<br>□ மீள் நிரப்பல் (Top-up)<br>□ மீட்பும் மீள் வழுங்கலும் (R&R)<br>□ புதிய கடன் | கடன் மீளளிப்புக் காலம்<br>□ 1 ஆண்டு □ 2 ஆண்டுகள் □ 3 ஆண்டுகள் □ 4 ஆண்டுகள்<br>□ 5 ஆண்டுகள் □ ……. ஆண்டுகள் |

| | |
|---|---|
| R&R கணக்கு இலக்கம்:<br><br>Top-up கணக்கு இலக்கம் | மீளளிப்புக்கான விருப்பத்தேர்வு<br>□ நேர்கோட்டு முறை (சமமான மாதாந்தத் தவணைகள்)<br>□ குறைந்துசெல்லும் மீதி |

**வட்டி வீத வகை:** (விபரங்களுக்கு "வட்டி வீத வகை" என்ற பிரசுரத்தைப் பார்க்கவும்).

□ மிதப்பு □ 1 வருடம் நிலையானது □ 3 வருடங்கள் நிலையானது □ 5 வருடங்கள் நிலையானது

□ 5 வருடங்கள் நிலையானது, மீதி 2 வருடங்கள் வருடாந்தம் மிதக்கவிடப்படும்.*

* (7 வருட கார் கடன்களுக்கு மட்டும்)

**கடன் பெறுவதன் நோக்கம்**

□ வாகனக் கொள்வனவு □ கல்வி □ திருமணம் □ பயணம்/விடுமுறைக் கழிப்பு □ வீட்டைத் திருத்துதல்

□ கடன்களை ஒருங்கிணைத்தல் /மீள நிதியிடல் □ பாவனைப் பொருள்களின் கொள்வனவு □ வேறு

**மீளளிப்புக்கான மூலாதாரம்**

| | |
|---|---|
| □ தொழில் மூலமான சம்பாத்தியம் | □ வியாபாரத்தின் மூலமான சம்பாத்தியம் |
| □ லொத்தர் வெற்றி/பரிசுப் பணம் | □ முதலீட்டின் வருமானம் /முதலீட்டின் முதிர்ச்சி |
| □ சொத்து ஒன்றின் (உதா. கார்) விற்பனை | □ பரம்பரை உரிமை |
| □ தனிப்பட்ட சேமிப்பு | □ வேறு ……………………… |

வாடிக்கையாளரின் ஒப்பம்

## வட்டி வீத வகை:

**சகல கடன்களுக்கும்**

**1 வருட நிலையான வீதம் (திறைசேரி உண்டியல்களுடன் இணைக்கப்பட்டது)** - 1 வருட நிலையான வட்டி வீதம் 1 வருடத்திற்கென நிர்ணயிக்கப்பட்டு, 12 மாதங்களின் பின் (வருடாந்தம்) மீளாய்வு செய்யப்படும். வட்டி வீதங்களும் மாதாந்தத் தவணைத் தொகைகளும் 12 மாதங்களுக்குப் பின் (வருடாந்தம்) மாற்றமடையக்கூடும். வருடாந்தம் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதங்கள் கடனின் ஆண்டு நிறைவுத் திகதியில் (அல்லது அடுத்த வேலை நாளில்) இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட 1 வருட திறைசேரி உண்டியல் வீதத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும்.

**நிலையான வீதம்** - கடன் வசதியின் மீளளிப்புக் காலம் (அதிகபட்சமாக 5 ஆண்டுகள்) முழுவதற்குமாக வட்டி வீதம் நிர்ணயிக்கப்படும்.*

**கார் கடன்களுக்கு மட்டும்**

**5 வருடங்கள் நிலையான, மீதி 2 வருடங்கள் மிதப்பான வீதம்** - கடன் மீளளிப்புக் காலம் 7 ஆண்டுகளெனின், வட்டி வீதம் முதல் 5 ஆண்டுகளுக்கு மட்டும் நிலையானதாக இருக்கும். கடன் பெறப்பட்ட திகதியிலிருந்து 5 வருடங்களின் பின்பு, வங்கியினால் தீர்மானிக்கப்படும் முறையில் நடப்பிலுள்ள மிதப்பு வட்டி வீதத்திற்கு அமைய வட்டி நிர்ணயிக்கப்படும். இது காலத்திற்குக் காலம் வங்கியினால் தீர்மானிக்கப்படும் முறையில் சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப மாற்றத்திற்கு உள்ளாகக்கூடும்.

## பிரிவு E – கடன் மீளளிப்பு

□ மாதாந்த மீளளிப்புத் தொகை வங்கியிலுள்ள எனது/எமது ………………………………….. இலக்கக் கணககில் மாதாந்தம் பற்று வைக்கப்பட வேண்டும்.

அல்லது

□ வங்கியில் புதிய கணக்கொன்று ஆரம்பிக்கப்பட வேண்டும்.

(கடன் அங்கீகரிக்கப்பட்டதும் கடன் மீளளிப்புக் கணக்கொன்றை ஆரம்பிக்கும் படிவத்தை நிரப்பவும்)

வாடிக்கையாளரின் ஒப்பம்

## பிரகடனம்

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும் இவ் விண்ணப்பத்தை நிரப்பும்போது எவ்வித முக்கிய தகவலும் வேண்டுமென்றே மறைக்கப்படவில்லை என்றும் நான்/நாம் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம். இவ் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள விபரங்களை நீங்கள் சரியென நினைக்கும் எந்த இடத்திலிருந்தும் ஊர்ஜிதம் செய்துகொள்ள நான்/நாம் உங்களுக்கு அதிகாரம் அளிக்கிறேன்/அளிக்கிறோம்.

எல்லா வேளைகளிலும் கணக்குத் தொடர்பான புதிய மற்றும் மிகப் பிந்திய தகவல்கள் வங்கியிடம் இருக்க வேண்டும் என்பதற்காக, கணக்கு ஆரம்ப விண்ணப்பத்தில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள தகவல்களில் மாற்றம் ஏற்படுமாயின், அது பற்றி வங்கிக்கு உடனடியாக அறிவிக்க நான்/நாம் இணங்குகிறேன்/இணங்குகிறோம்.

இவ் விண்ணப்பம் என்னாலேயே/எம்மாலேயே நிரப்பப்பட்டது என்பதை நான்/நாம் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

கணக்கு தொடர்பான சகல விபரக்கூற்றுகளையும் ஏனைய அறிக்கைகளையும், அவை கிடைத்த உடனேயே பரிசீலனை செய்வது எனது/எமது பொறுப்பு என்பதையும் அவ்வாறு செய்ய நான்/நாம் தவறினால், தகவல் தெரிவிக்கப்பட வேண்டிய காலக்கெடுவிற்குப் பின்னர் ஏற்படக்கூடிய ஏதேனும் இழப்பிற்கு வங்கியைப் பொறுப்பாளியாக்க முடியாது என்பதையும் நான்/நாம் ஏற்றுக்கொண்டு, உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

நான்/நாம் இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பித்த வேளையில் கார் கடன்கள் உள்ளிட்ட லை∴ப்ஸ்டைல் கடன்கள் தொடர்பான விதிகள் மற்றும் நிபந்தனைகள் (அவற்றின் பிரதி இந்த விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) எனக்கு/எமக்கு விளக்கிக்கூறப்பட்டன என்பதையும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் அடங்கியுள்ள ஏற்பாடுகளை நான்/நாம் நன்கு விளங்கிக்கொண்டேன்/விளங்கிக்கொண்டோம் என்பதையும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் www.hsbc.lk என்ற HSBC இணையத்தளத்தில் பெற முடியும் மற்றும்/அல்லது அவற்றின் பிரதியொன்றை HSBC கிளையொன்றில் என்னால்/எம்மால் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் நான்/நாம் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

வாடிக்கையாளரின் ஒப்பம்

2006ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க பணத் தூய்மையாக்கல் தடுப்புச் சட்டம் (PMLA) (திருத்தப்பட்டவாறு), 2006ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க நிதிக் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டம் (FTRA) (திருத்தப்பட்டவாறு) ஆகியவற்றின் ஏற்பாடுகள் மற்றும் அவை தொடர்பான வழிகாட்டுதல்கள், பணிப்புரைகள் என்பவற்றையும் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க இலங்கை வங்கியியல் சட்டம் மற்றும் திருத்தப்பட்ட அச் சட்டத்தின் கீழ் 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலங்கை மத்திய வங்கியினால் விடுக்கப்பட்ட பணிப்புரைகளின் ஏற்பாடுகள், கைவிடப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அச் சட்டத்தில் அடங்கியுள்ள வழிகாட்டுதல்கள் மற்றும் பணிப்புரைகள் என்பவற்றையும் நான்/நாம் அறிவேன்/அறிவோம் என்பதை நான்/நாம் உறுதிப்படுத்துகிறேன்/உறுதிப்படுத்துகிறோம்.

வங்கியானது எல்லா வேளைகளிலும் மேற்குறிப்பிட்ட சட்ட ஏற்பாடுகளின் தேவைகளுக்கும் இலங்கையிலுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கியொன்றின் செயற்பாடுகள் தொடர்பிலான சட்டங்கள், பணிப்புரைகள் மற்றும் வழிகாட்டுதல்களுக்கும் அமைவாக நடக்கும் என்பதை நான்/நாம் ஊர்ஜிதம்செய்து, புரிந்துகொண்டு, அதற்கு இணங்குகின்றேன்/இணங்குகின்றோம்.

| | |
|---|---|
| ………………………………………….. | …………………………………………. |
| பிரதான விண்ணப்பதாரரின் கையொப்பம் | கூட்டு விண்ணப்பதாரரின் கையொப்பம் |
| திதி மாமா வவவவ | திதி மாமா வவவவ |

மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்/கையொப்பதாரர் எனது முன்னிலையில் இவ் விண்ணப்பத்தில் கையொப்பமிட்டார்:

……………………………….
சாட்சியாளரின் கையொப்பம்

1. முழுப் பெயர்: ……………………………………………………………….
   முகவரி: ……………………………………………………………….
   தொழில்: ……………………………………………………………….
   தொலைபேசி இல. ………………………………………………………….

வாடிக்கையாளரின் ஒப்பம்

……………………………….
சாட்சியாளரின் கையொப்பம்

2. முழுப் பெயர்: ……………………………………………………………….
முகவரி: ……………………………………………………………….
தொழில்: ……………………………………………………………….
தொலைபேசி இல. …………………………………………………………

## பிரிவு F – உறுதிமொழிப் பத்திரம்

கொழும்பு, 20...... ..... ......

ரூ. ..................

கிடைக்கப்பெற்ற பெறுமதிக்காக, ........................................................................................................ இலங்கை ரூபாயை ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் 'வங்கி' இன் கொழும்பிலுள்ள அலுவலகத்திற்கு, கோரிக்கையின் பேரில் செலுத்த நான்/நாம் தனித்தனியாகவும் கூட்டாகவும் வாக்குறுதி அளிக்கிறேன்/அளிக்கிறோம்.

வட்டியானது ஆண்டிற்கு ............ ஆக அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்படும் வேறு வீதத்தில் அறவிடப்படும்.

……………………………….
பிரதான விண்ணப்பதாரரின் கையொப்பம்

……………………………….
கூட்டு விண்ணப்பதாரரின் கையொப்பம்

பிரதான விண்ணப்பதாரரின் முழுப் பெயர்
பிரதான விண்ணப்பதாரரின் தே.அ.அ. இலக்கம்
கூட்டு விண்ணப்பதாரரின் முழுப் பெயர்
கூட்டு விண்ணப்பதாரரின் தே.அ.அ. இலக்கம்

மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்/கையொப்பதாரர் எனது முன்னிலையில் இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டார்:

………………………………

சாட்சியாளரின் கையொப்பம்

1. முழுப் பெயர் : ………………………………………………………

வசிப்பிட முகவரி : ………………………………………………………

மேற்குறிப்பிட்ட வாடிக்கையாளர்/கையொப்பதாரர் எனது முன்னிலையில் இந்த உறுதிமொழிப் பத்திரத்தில் கையொப்பமிட்டார்:

………………………………

சாட்சியாளரின் கையொப்பம்

2. முழுப் பெயர் : ………………………………………………………

வசிப்பிட முகவரி : ………………………………………………………

## விதிகள் மற்றும் நிபந்தனைகள்

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் (இனிமேல் ''வங்கி'' என்று அழைக்கப்படும்)) வழங்கும் கார் கடன் உட்பட சகல லை.்.ப்ஸ்டைல் கடன் கணக்குகளும் பின்வரும் விதிகள் மற்றும் நிபந்தனைகளினால் ஆட்சி செய்யப்படும்.

1. நிலுவையாகவுள்ள மொத்தத் தொகை பூரணமாகத் தீர்ப்பனவு செய்யப்படும் வரை கடன் தொகையையும் வட்டியையும் (இனிமேல் ''தவணைக் கொடுப்பனவுகள்'' என்று அழைக்கப்படும்) குறித்துரைக்கப்பட்ட திகதி தொடக்கம் கொழும்பிலுள்ள வங்கிக்குக் கிரமமதாகச் செலுத்தும் பொருட்டு நிலையான கட்டளையை விடுக்க அல்லது சம்பளத்தை அனுப்பிவைக்கவும், முதலாவது கோரிக்கை விடுக்கப்பட்டதும் செலுத்தப்பட வேண்டிய முழுத் தொகை, வட்டி, செலவினங்கள், வங்கியின் தேவைகள் மற்றும் நடைமுறையிலுள்ள நிலையான பிரமாணங்களுக்கேற்ப காலத்திற்குக் காலம் வங்கியினால் அறவிடப்படும் ஏதேனும் கட்டணங்கள் என்பவற்றைச் செலுத்தவும் கடனாளி/கடனாளிகள் இத்தால் இணங்குகின்றார்/இணங்குகின்றனர்.

2. கடனாளி/கடனாளிகள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகை முழுவதையும் கோரவும் கடனாளிக்கு/கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் வசதியை (விதிகள் மற்றும் நிபந்தனைகள் மீறப்பட்டமைக்காக அல்லது வேறேதும் காரணத்திற்காக) தனது சுய விருப்பின் பேரிலும் காரணம் அல்லது நியாயப்படுத்தல் எதனையும் தெரிவிக்காமலும் மாற்றுவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்கு வங்கி விருப்புரிமை கொண்டுள்ளது.

கடனை மீட்பதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கவும் ஏதேனும் சட்ட நடவடிக்கைச் செலவுகள், நீதிமன்றக் கட்டணங்கள், சட்டத்தரணியின் கட்டணங்கள் என்பவற்றைக் கடனாளியின் கடன் தொகையுடன் சேர்த்துக்கொள்ளவும் வங்கிக்கு உரிமையுண்டு என்பதைக் கடனாளி ஒப்புக்கொள்கிறார்.

அத்துடன், கடனாளி தான் மரணமடையும் பட்சத்தில் தனது வாரிசுகள், நிறைவேற்றுநர்கள், நிர்வாகிகள், பொறுப்பு ஒப்படைக்கப்பட்டவர்கள் அனைவரும் இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பார்கள் என்பதையும் ஒப்புக்கொள்கிறார்.

3. கடனாளியின்/கடனாளிகளின் பெயரில்/பெயர்களில் உள்ள ஏதேனும் கணக்கில் மேலதிகப் பற்று வைக்கப்பட்டிருப்பின், அதற்கான வட்டியை அறவிட வங்கிக்கு உரிமையுண்டு. இந்த வட்டி தினசரி நிலுவையின் அடிப்படையிலான வீதத்தில் அல்லது கீழே உறுப்புரை 4இல் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு வங்கியினால் காலத்திற்குக் காலம் அறிவிக்கப்படும் வேறேதும் வீதத்தில் கணிக்கப்படும்.

வங்கியினால் வழமையான முறைப்படி கணிக்கப்படும் வட்டியானது ஒவ்வொரு மாதமும் அல்லது வங்கியினால் தீர்மானிக்கப்படும் கால இடைவெளிகளில் கடனாளியின்/ கடனாளிகளின் கணக்கில் பற்று வைக்கப்படும். கடனாளிக்கு/ கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட இந்த அல்லது ஏனைய கடன் வசதிகள் தொடர்பான அல்லது கடனாளியின்/கடனாளிகளின் மூலம் அல்லது சார்பில் எழுத்து மூலம் அல்லது வேறு வழியில் விடுக்கப்பட்ட கட்டளையின் பேரிலான ஏதேனும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான ஏதேனும் தரகுப்பணம், செலவுகள் அல்லது அறவீடுகள் கடனாளியின்/கடனாளிகளின் வங்கிக் கணக்கில் பற்று வைக்கப்படலாம்.

வாடிக்கையாளரின் ஒப்பம்

4. இந்த வசதிகள் தொடர்பில் கடனாளிக்கு/கடனாளிகளுக்கு வங்கி சமர்ப்பிக்க விரும்பும் ஏதேனும் உரிமைக் கோரல்கள், அழைப்பாணைகள், ஆலோசனைகள், அறிவித்தல்கள் என்பன எழுத்து மூலம், பதிவுத் தபாலில், வங்கிக்குக் கடைசியாகத் தெரிந்த கடனாளியின் முகவரிக்கு அனுப்பப்படும் பட்சத்தில் முறைப்படி வழங்கப்பட்டதாகக் கருதப்படும்.

5. வட்டி வீத மாற்றங்கள் கடிதம் அல்லது விபரக்கூற்றுச் செய்தி மூலம் அல்லது வங்கியின் கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் அல்லது www.hsbs.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படுவதன் மூலம் அறிவிக்கப்படும்.

6. வங்கியிடமிருந்து கிடைக்கும் சகல கணக்கு விபரக்கூற்றுக்களையும் கவனமாக பரிசீலிக்க கடனாளி/கடனாளிகள் இணங்குகின்றார்/இணங்குகின்றார்கள். வங்கியின் பதிவேடுகளில் உள்ளவாறான கணக்கு விபரக்கூற்று கடனாளியின் முகவரிக்கு அனுப்பப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் கடனாளியிடம் இருந்து ஆட்சேபனை எதுவும் பெறப்படாவிட்டால், அந்த விபரக்கூற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள மீதி சரியானதாகக் கருதப்படும். கடனாளியிடமிருந்து எவ்வித தொடர்பாடலும் கிடைக்காமை, அவர் அந்தக் கணக்கு விபரம் சரியானதென ஒப்புக்கொண்டுள்ளார் என்பதைக் குறிக்கும். எனவே, அக் கணக்கு விபரக்கூற்று தொடர்பாக ஆட்சேபனை தெரிவிக்க முடியாது.

   எதேனுமொரு காலப்பகுதிக்கு கணக்கு விபரக்கூற்று பெறப்படாவிட்டால், வங்கியிடமிருந்து அதனைக் கேட்டுப் பெறுவது தனது/ தமது முழுப் பொறுப்பாகும் என்பதை கடனாளி/ கடனாளிகள் ஏற்றுக்கொள்கின்றார்/ ஏற்றுக்கொள்கின்றனர்.

7. தவறுகை நிகழும் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றன:

(அ) வங்கி அதிகாரிகளின் தீர்மானப்படி, குறிப்பிட்டதொரு மாதத்தில் செலுத்தப்பட வேண்டிய பிரதான கடன் தொகை அல்லது வட்டி அல்லது தவணைக் கொடுப்பனவு செலுத்தப்படாதிருத்தல்.
மற்றும்/அல்லது

(ஆ) வங்குரோத்து நிலை/வகையறு நிலை

கடனாளியின்/கடனாளிகளின் கடன் நடத்தை பற்றி இலங்கை கொடுகடன் பணியகத்திற்கு (CRIB) மற்றும்/அல்லது வேறேதும் உள்நாட்டு அல்லது சர்வதேச

வாடிக்கையாளரின் ஒப்பம்

கடன் தகவல் பணியக்திற்கு தனது சுயவிருப்பின் பேரில் அறிவிக்க வங்கி உரிமை கொண்டுள்ளது என்பதை கடனாளி/கடனாளிகள் ஏற்றுக்கொண்டு, அதற்கு இணங்குகின்றார்/இணங்குகின்றனர்.

8. வங்கியின் பாதுகாப்பிலும் கட்டுப்பாட்டிலுமுள்ள கடனாளியின்/கடனாளிகளின் சொத்துரிமைகள் மற்றும் அக்கறைகள் மீது பாத்தியம் மற்றும் எதிரீடு செய்யும் உரிமை (அல்லது அது போன்ற உரிமை) வங்கிக்கு உண்டென்பதையும் இந்த உரிமைகளை வங்கி பிரயோகிக்க முடியுமென்பதையும் கடனாளி/கடனாளிகள் ஏற்றுக்கொள்கிறார்/ஏற்றுக்கொள்கின்றனர். கடனாளியின்/ கடனாளிகளின் பெயரில்/ பெயர்களில் உள்ள கணக்குகள் எத்ததைய தலைப்பின் கீழ் இருந்தாலும் அவை அனைத்தையும் அல்லது அவற்றில் சிலவற்றை முன்னறிவித்தல் கொடுக்காமலே எந்த நேரத்திலும் ஒருங்கிணைக்கவும் மற்றும்/அல்லது ஏதேனுமொரு கணக்கில் மேலதிகமாகப் பற்று வைக்கப்பட்ட தொகைக்காக, வங்கியின் அலுவலகம் ஒன்றில் எந்தவொரு நாணயத்திலாவது பேணப்படும் கடனாளியின்/கடனாளிகளின் கணக்கிலுள்ள தொகையை எதிரீடு செய்யவும் வங்கி நடவடிக்கை எடுக்கலாம் என்பதை கடனாளி/கடனாளிகள் ஏற்றுக்கொள்கின்றார்/ஏற்றுக்கொள்கின்றனர்.

9. நிலுவையாகவுள்ள கொடுப்பனவுகளை மீட்பதற்கு மூன்றாம் தரப்பு சேகரிப்பு முகவர்களை நியமிக்க கடனாளி/கடனாளிகள் வங்கிக்கு ஒப்புதலையும் அதிகாரத்தையும் வழங்குகின்றார்/வழங்குகின்றனர். கொடுப்பனவை மீட்பதற்குச் சேமிப்பு முகவர் ஒருவரின் உதவியை நாட வேண்டிய அல்லது சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படுமாயின், சேகரிப்பு முகவரின் கட்டணங்கள், சட்டச் செலவுகள் ஆகியவற்றைக் கடனாளியே/கடனாளிகளே செலுத்த வேண்டும்.

10. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் உரிமையை அல்லது பரிகாரத்தை (முழுமையாக அல்லது பகுதியாக) பிரயோகிக்க அல்லது அமுல்செய்ய வங்கி தாமதிப்பதால் அல்லது தவறுவதால் வங்கியின் அந்த உரிமை அல்லது பரிகாரம் வலுவிழக்க மாட்டாது. அந்த உரிமையை அல்லது பரிகாரத்தை வங்கி விட்டுக்கொடுத்துவிட்டதாகவும் கருத முடியாது.

11. இந்த உடன்படிக்கை இலங்கைச் சட்டங்களுக்கு அமைவானதாகக் கருதப்பட்டு, செயற்படுத்தப்படும். வங்கி நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய விரும்பினால், கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் அவ்வாறான வழக்கைத் தாக்கல் செய்ய முடியும்.

வாடிக்கையாளரின் ஒப்பம்

கடனாளி/கடனாளிகள் அத்தகைய நீதிமன்றத்தின் அதிகாரத்திற்கும் அது தொடர்பான ஏனைய சட்டங்களுக்கும் பணிந்து நடக்க வேண்டும். கடன் வசதியானது வழங்கப்பட்டிருந்தால் அல்லது தொடர்ந்து வழங்கப்பட்டால், செலுத்தப்பட வேண்டிய சகல பணத்திற்கும் கடனாளி/கடனாளிகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் வங்கிக்குப் பொறுப்புடையவர்களாக இருப்பார்கள்.

12. கடனாளியானவர் மிதப்பு வட்டி வீதத்தை முடிவு செய்திருந்தால், மாதாந்தத் தவணைக் கொடுப்பனானது, குறைந்தபட்ச அல்லது அதிகபட்ச எல்லை எதுவுமில்லாமல் கூடிக்குறையக்கூடும் என்பதை கடனாளி நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்பதையும் மிதப்பு வட்டி வீதத்துடன் சம்பந்தப்பட்ட சகல இடர்களையும் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்க வேண்டும் என்பதையும் கடனாளி ஒப்புக்கொள்கிறார்.

13. மிதப்பு வட்டி பிரயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களில், லை∴ப்ஸ்டைல் கடன்கள் மீதான வட்டியானது சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் முறையில் காலத்திற்குக் காலம் மாறக்கூடும் என்பதை கடனாளி / கடனாளிகள் ஏற்றுக்கொள்கின்றார் / ஏற்றுக்கொள்கின்றனர். மாதாந்த மீளளிப்புத் தவணைக் கொடுப்பனவானது கடனாளியின் / கடனாளிகளின் நடைமுறை / சேமிப்புக் கணக்கிற்கு அல்லது வங்கியிடன் இணங்கிக்கொள்ளப்பட்ட வேறேதும் ஏற்பாட்டிற்கு அமைய செலுத்தப்பட வேண்டும். வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றம் தவணைக் கொடுப்பனவுத் தொகையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

14. மாதாந்த மீளளிப்புத் தவணைக் கொடுப்பனவானது கடனாளியின் / கடனாளிகளின் நடைமுறை / சேமிப்புக் கணக்கிற்கு அல்லது வங்கியிடன் இணங்கிக்கொள்ளப்பட்ட வேறேதும் ஏற்பாட்டிற்கு அமைய செலுத்தப்பட வேண்டும். வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் மேலே சரத்து 4இல் தெரிவிக்கப்பட்டுள்ள முறையில் கடனாளிக்கு / கடனாளிகளுக்கு அறிவிக்கப்படும். வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றம் தவணைக் கொடுப்பனவுத் தொகையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

15. ஷகடனாளியின் தெரிவுக்கேற்ப, வட்டி வீதங்கள் 05 வருடங்களுக்கு அல்லது பன்னிரண்டு (12) மாத காலப்பகுதிகளுக்கென (வருடாந்த நிலையான வட்டி வீதம்) நிர்ணயிக்கப்படலாம். வருடாந்தம் நிர்ணயிக்கப்படும் வட்டி வீதங்கள் கடனின் ஆண்டு நிறைவுத் திகதியில் (அல்லது அடுத்த வேலை நாளில்) இலங்கை மத்திய

வாடிக்கையாளரின் ஒப்பம்

வங்கியினால் வெளியிடப்பட்ட 1 வருட திறைசேரி உண்டியல் வீதத்தின் அடிப்படையில் மீளாய்வு செய்யப்படும். மாதாந்த மீளளிப்புத் தவணைக் கொடுப்பனவானது கடனாளியின் / கடனாளிகளின் நடைமுறை / சேமிப்புக் கணக்கிற்கு அல்லது வங்கியிடன் இணங்கிக்கொள்ளப்பட்ட வேறேதும் ஏற்பாட்டிற்கு அமைய செலுத்தப்பட வேண்டும். வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றங்கள் மேலே சரத்து 4இல் தெரிவிக்கப்பட்டுள்ள முறையில் கடனாளிக்கு / கடனாளிகளுக்கு அறிவிக்கப்படும். வட்டி வீதத்தில் ஏற்படும் மாற்றம் தவணைக் கொடுப்பனவுத் தொகையிலும் மாற்றத்தை ஏற்படுத்தும்.

16. கடன் தவணைத் தொகைகள் ஒவ்வொரு மாதமும் ஒதுக்கப்பட்ட செலுத்தும் திகதியில் செலுத்தப்பட வேண்டும். கடன் தவணைத் தொகைகளை, லை∴ப்ஸ்டைல் கடன் விண்ணப்பப் படிவத்தில் குறித்துரைக்கப்பட்ட கடன் மீளளிப்புக் கணக்கில் ஒதுக்கப்பட்ட திகதிகளில் பற்று வைக்க, கடனாளி/கடனாளிகள் வங்கிக்கு அதிகாரம் அளிக்கின்றார்/அளிக்கின்றனர்.

அத் திகதியில், தேறிய பணம் கணக்கில் இருக்காவிட்டால், கணக்கில் வரவு வைக்கப்படும் பணம் அனைத்தும் திரட்டப்பட்டு, அடுத்த மாதத்தின் ஒதுக்கப்பட்ட செலுத்தும் திகதியில் அல்லது நிலுவையாகவுள்ள தவணைத் தொகைகளை ஈடுசெய்யக்கூடிய பணம் கிடைக்கும்போது, தவணை நிலுவைகளையும் தவறுகைக்கான வட்டியையும் பெற்றுக்கொள்வதற்குப் பயன்படுத்தப்படும். தவறுகை வட்டியானது நிலுவையாகவுள்ள தவணைத் தொகைகள் மற்றும் வட்டியின் பேரில் அறவிடப்படும்.

கடனாளி/கடனாளிகள் பல நிலுவைக் கடன் வசதிகளைக் கொண்டிருந்தால், வங்கியானது தனது சுய தீர்மானத்தின் பேரிலும் தனக்கு விருப்பமான முறையிலும், அவரது/அவர்களது ஏதேனும் சேமிப்பு/நடைமுறைக் கணக்கிலிருந்து ஏதேனும் பணத் தொகைகளை மீட்டுக்கொள்ள இத்தால் அதிகாரம் அளிக்கின்றார்/அளிக்கின்றனர். இத்தகைய கடன் மீட்பு குறித்து கடனாளி/கடனாளிகள் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்க முடியாது.

ஏற்பாட்டுக் கட்டணம், முன்கூட்டிய மீளளிப்புக் கட்டணம், ஒட்டுமொத்தக் கொடுப்பனவு மீதான அறவீடு மற்றும் காலத்திற்குக் காலம் கொண்டுவரப்படக்கூடிய அல்லது திருத்தப்படக்கூடிய வேறேதும் கட்டணங்கள் அல்லது அறவீடுகள் கடனாளியின்/கடனாளிகளின் கணக்கில் பற்று வைக்கப்பட்டு, கணக்கு விபரக்கூற்றில்

வாடிக்கையாளரின் ஒப்பம்

காட்டப்படும் என்பதை கடனாளி/ கடனாளிகள் ஏற்றுக்கொள்கின்றார்/ ஏற்றுக்கொள்கின்றனர்.

17. முன்கூட்டிய/பகுதிக் கொடுப்பனவுகள், வங்கியினால் அதன் விருப்பத்திற்கேற்பக் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் ஒரு கட்டணத்தின் பேரில் ஏற்றுக்கொள்ளப்படும்.

18. கடனாளி/கடனாளிகள் தனது/தமது தற்போதய தொழிலில் மாற்றம் அல்லது முடிவுறுத்தல் ஏற்பட்டால் மற்றும்/அல்லது வசிப்பிட முகவரியில் மற்றும்/அல்லது கடிதத் தொடர்பு முகவரியில் மாற்றம் ஏற்பட்டால், உடனடியாக அது பற்றி வங்கிக்கு அறிவிக்க இத்தால் உடன்படுகின்றார்/உடன்படுகின்றனர்.

19. ‘‘கோரிக்கையின் பேரில் முழுப் பணத்தையும் பெறுதல்’’, ‘‘எந்த நேரத்திலும் கடன் வசதியை மீளாய்வு செய்தல்’’ ஆகிய வங்கியின் வழமையான மேலாதிக்க உரிமையின் அடிப்படையிலேயே சகல கடன் வசதிகளும் வழங்கப்படுகின்றன.

20. சகல கடன் வசதிகளும் வங்கியின் குறிப்பான அங்கீகாரத்தின் பேரிலேயே வழங்கப்படும். எவ்வித காரணமும் காட்டாமல், எந்தவொரு கடன் விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் உரிமை வங்கிக்கு உண்டு.

21. கடனை இரத்துச்செய்ய அல்லது இடைநிறுத்த அல்லது கடன் தொடர்பிலான பணப் பெறுகைகளைத் தடுக்க வங்கியானது வரையறையற்ற உரிமையைக் கொண்டுள்ளது.

22. கடனாளி, இலங்கையிலுள்ள ஏதேனும் பட்டியலிடப்பட்ட அல்லது பட்டியலிடப்படாத நிறுவனத்தில் பத்து சதவீதம் (10%) அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளை வைத்திருந்தால் மற்றும்/அல்லது பெற்றுக்கொண்டால், அது பற்றி வங்கிக்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

23. இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளில் எதையேனும் சேர்க்க, நீக்க அல்லது மாற்ற வங்கி உரிமை கொண்டுள்ளது. அத்தகைய மாற்றங்கள் கடிதம் அல்லது விபரக்கூற்றுச் செய்தி மூலம் அல்லது வங்கியின் கிளைகளிலுள்ள அறிவித்தல் பலகைகளில் அல்லது www.hsbs.lk என்ற வங்கியின் வலைத்தளத்தில் பார்வைக்கு வைக்கப்படுவதன் மூலம் கடனாளிக்கு/கடனாளிகளுக்கு அறிவிக்கப்படும்.

வாடிக்கையாளரின் ஒப்பம்

நான்/நாம் மேற்காணப்படும் விதிகள் மற்றும் நிபந்தனைகளை வாசித்து, விளங்கிக்கொண்டு, இதன் கீழுள்ள கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் உரிமைகளை அறிந்துகொணடு, இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம் என்பதை உறுதிப்படுத்துகின்றேன் / உறுதிப்படுத்துகின்றோம்.

……………………………… ………………………………

பிரதான விண்ணப்பதாரரின் கையொப்பம் கூட்டு விண்ணப்பதாரரின் கையொப்பம்

திதி மாமா வவவவ திதி மாமா வவவவ

## பிரிவு G - தொழில் வழங்குநரின் கடிதம் (மாதிரிக் கடிதம்)

கூட்டு விண்ணப்பத்தைப் பொறுத்தவரையில், இரு விண்ணப்பதாரர்களும் தத்தமது தொழில் வழங்குநரிடம் பெற்ற தனித்தனிக் கடிதங்களைச் சமர்ப்பிக்க வேண்டும் (கீழே குறிப்பிட்டுள்ளவாறு).

வாடிக்கையாளரின் ஒப்பம்

முகாமையாளர்

**ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்**

கொழும்பு 01

திகதி:……………..

அன்புள்ள ஐயா/அம்மணி,

லை.ஃ.ப்ஸ்டைல் கடனின் விண்ணப்பதாரர் ..........................................................................................

(ஊழியரின் பெயர் - இனிமேல் ‘‘கடனாளி’’ என்று அழைக்கப்படுவார்)

தே.அ.அ. இல ..........................................................................................................................................

1. கடனாளி எமது தொழில் நிலையத்தில் வகிக்கும் பதவி: ..........................................................

2. கடனாளி இத் திகதி முதல் வேலை செய்கிறார் (சேர்ந்த திகதி) ......................................................

3. கடனாளியின் தற்போதய தொழில் அந்தஸ்து: (சரியானதை அடையாளமிடவும்):

□ஊர்ஜிதம் செய்யப்பட்ட நிரந்தரத் தொழில் □நிரந்தர தகுதிகாண் நிலை

□ஊர்ஜிதம் செய்யப்பட்ட ஒப்பந்தத் தொழில்* □ஒப்பந்த தகுதிகாண்நிலை*

கடனாளி ஒப்பந்தத்தில் இருந்தால் தயவுசெய்து ஒப்பந்தக் காலத்தைக் குறிப்பிடவும்.

4. கடனாளியின் சம்பள விபரங்கள் பின்வருமாறு:

(அ) அடிப்படைச் சம்பளம்: ....................................................................

கழிப்புக்கள்: (விபரங்களைக் குறிப்பிடவும்) ...................................................................

நிகர சம்பளம்:

(ஆ) படிகள்:

(1) நிலையான படிகள்: ....................................................................

(2) மாறக்கூடிய படிகள்: ....................................................................

மேற்குறிப்பிட்ட விபரங்கள் உண்மையானவையும் சரியானவையும் ஆகுமென நாம் உறுதிசெய்கிறோம்.

வாடிக்கையாளரின் ஒப்பம்

5. பின்வரும் சந்தர்ப்பங்களில் வங்கிக்கு உடனடியாக அறிவிக்க நாம் நடவடிக்கை எடுப்போம் என்பதையும் நாம் உறுதிப்படுத்துகிறோம்:
   (அ) கடனாளி இராஜினாமாக் கடிதத்தைச் சமா்ப்பித்தால்
   (ஆ) கடனாளி தொழிலிலிருந்து ஓய்வுபெற்றால்
   (இ) கடனாளி எமது நிறுவனத்திலிருந்து விலக்கப்பட்டால்
   (ஈ) கடனாளி மரணமடைந்தால்

**கவனிக்கவும்:** கீழுள்ளது பொருத்தமில்லையெனின், வெட்டிவிடவும்.

6. கடனாளி விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, கடனாளிக்குச் செலுத்தப்பட வேண்டிய நிகர மாதாந்தச் சம்பளம் மற்றும் படிகளை / கடன் தவணைக் கொடுப்பனவை கடனாளியின் கணக்கில் (கணக்கு இல. ............................................................)
   வரவு வைக்கப்படுவதற்காக ர்ளுடீஊக்கு அனுப்ப நாம் இணங்குகின்றோம். வங்கியின் முன்கூட்டிய சம்மதம் இல்லாமல் இந்த ஏற்பாட்டை நாம் மாற்ற மாட்டோம்.

மேறகுறிப்பிட்ட உடன்பாடுகள் வங்கியின் முன்கூட்டிய சம்மதம் இல்லாமல் எம்மால் திருத்தப்படவோ மாற்றப்படவோ மாட்டா. வங்கியினால் அறிவிக்கப்படும் வரை அவை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

உங்கள் நம்பிக்கைக்குரிய,

(அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பதாரா் மற்நும் றபா் முத்திரையில்)

கையொப்பமிட்டுள்ளவரின் பெயா்:

பதவி:

தொடா்பு விபரங்கள் (அலுவலக):

## பிரிவு H – கட்டணங்களும் விதிப்பனவுகளும்

**கடன் மீளளிப்பு:**

உங்கள் சம்பளத்தை உங்கள் மீளளிப்புக் கணக்கில் வரவு வைப்பதன் மூலம் அல்லது கடன் தவணைக் கொடுப்பனவுத் தொகையை மாதாமாதம் இன்னொரு வங்கியிலிருந்து உங்கள் HSBC மீளளிப்புக் கணக்கிற்கு அனுப்புவதற்கான நிலையான அறிவுறுத்தலை (S.I.)

ஏற்படுத்துவதன் மூலம் உங்கள் கடனை மீளளிக்க முடியும். 1 வருட நிலையான வட்டிக் கடனின் தவணைக் கொடுப்பனவுத் தொகையானது, சந்தை வட்டி வீதங்களுக்கேற்ப வங்கியினால் தீர்மானிக்கப்படும் முறையில் காலத்திற்குக் காலம் மாற்றமடையலாம். அவ்வாறு மாற்றம் நிகழுமாயின், உங்கள் புதிய மாதாந்தத் தவணைக் கொடுப்பனவுத் தொகைக்கேற்ப உங்கள் நிலையான அறிவுறுத்தல் தொகையை மாற்ற வேண்டும்.

உங்கள் மாதாந்த கடன் மீளளிப்புத் திகதியானது, உங்களுக்குக் கடன் வழங்கப்பட்ட அல்லது நீங்கள் கடனைப் பெற்றுக்கொண்ட திகதியைப் பொறுத்ததாக இருக்கும். வெவ்வேறு கடன் வழங்கல் திகதிகளுக்கான கடன் மீளளிப்புத் திகதிகள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. உங்கள் கடன் மீளளிப்புத் திகதி, உங்களுக்குக் கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

| கடன் வழங்கப்பட்ட/பெறப்பட்ட திகதி | மீளளிப்புத் திகதி* | நிலையான அறிவுறுத்தல் திகதி(கள்) |
|---|---|---|
| 01 முதல் 06 வரை | 27 | 19 முதல் 25 வரை |
| 07 முதல் 23 வரை | 04 | 29 முதல் 02 வரை |
| 24 முதல் 31 வரை | 11 | 05 முதல் 09 வரை |

உங்கள் மீளளிப்புத் திகதி ஒரு வங்கி விடுமுறை தினமாக இருந்தால், எவ்வித பிரச்சினையுமின்றி அதற்கு அடுத்த வேலை நாள் உங்கள் மீளளிப்பு நாளாக பின்போடப்படும்.

எனினும், உங்கள் நிதித் தேவைகளைப் பொறுத்து, உங்கள் வசதிக்காக மேற்குறிப்பிட்ட மீளளிப்புத் திகதிகளில் ஒன்றை நீங்கள் தெரிவு செய்யலாம். ஆனால், உங்கள் மீளளிப்புத் திகதியானது **கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 30 தினங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்** என்பதைத் தயவுசெய்து கவனிக்கவும். மேலும், உங்கள் மீளளிப்புத் திகதி மாற்றப்படும் பட்சத்தில், மீளளிப்புப் பின்போடப்படுவதால் திரண்ட வட்டியை/பிரதான தொகையை உங்கள் கடைசித் தவணையுடன் சேர்த்துச் செலுத்த வேண்டியிருக்கும்.

மீளளிப்புத் திகதி: (மேலுள்ள அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள மீளளிப்புத் திகதி தவிர்ந்த புதிய மீளளிபபுத் திகதி உங்களுக்குத் தேவைப்பட்டால்)

□ 27ஆம் திகதி □ 04ஆம் திகதி □ 11ஆம் திகதி

வாடிக்கையாளரின் ஒப்பம்

வாடிக்கையாளரின் ஒப்புதல்:

எனது மீளளிப்புத் திகதியை மாற்றுவது சம்பந்தமாக .............. ஆம் திகதி நான் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய, ........................................................................ என்னுமிடத்தில் வசிக்கும் (.......................…......... ஆகிய தே.அ.அ.. இலக்கங்களைக் கொண்ட) ....................................................... ஆகிய நான்/நாம், எனது/எமது தற்போதய மீளளிப்புத் திகதி (கடனின் முதலாவது தவணை மீளளிப்புத் திகதி அல்ல) என்னால்/எம்மால் பிற்போடப்படும் சந்தா்ப்பத்தில், மீளளிப்புத் திகதி பிற்போடப்படுவதால் சேரும் வட்டியை/பிரதான தொகை எனது/எமது கடைசித் தவணையுடன் சோ்த்துச் செலுத்த வேண்டியிருக்கும் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன் /ஏற்றுக்கொள்கிறோம்.

.......................................
பிரதான விண்ணப்பதாரரின் கையொப்பம்
திதி மாமா வவவவ

.......................................
கூட்டு விண்ணப்பதாரரின் கையொப்பம்
திதி மாமா வவவவ

இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகளின் தமிழ் மற்றும் சிங்கள மொழிபெயா்ப்புக்களுக்கும் ஆங்கில மூல ஆவணத்திற்கும் இடையே ஏதேனும் முரண்பாடு காணப்படின் ஆங்கில மூலப் பிரதியே சரியானதாகக் கொள்ளப்படும்.

**செயற்படுத்தல் கட்டணங்கள் மற்றும் அறவீடுகள்**

| தொகை | தனிப்பட்ட கடன்கள் | கார் கடன்கள் |
|---|---|---|
| ரூ.1 மில்லியன் மற்றும் அதற்குக் கீழ் | ரூ.4,500 | ரூ.5,000 |

| | | |
|---|---|---|
| ரூ.1 மில்லியனுக்கு மேல் | ரூ.7,000 | ரூ.7,500 |
| வேறு அறவீடுகள் | கடன் பெறுமதியின் ஒவ்வொரு ரூ.1,000க்கும் அல்லது அதன் பகுதிக்கும் (உறுதிமொழிப் பத்திரத்தின் பெறுமதி) ரூ.1 என்னும் அடிப்படையில் உறுதிமொழிப் பத்திரம் மீதான முத்திரை வரி. | அடைமான முறியின் பெறுமதியில் ஒவ்வொரு ரூ.1,000க்கும் அல்லது அதன் பகுதிக்கும் ரூ.1 என்னும் அடிப்படையில் முத்திரை வரி. |
| தாமதக் கொடுப்பனவுக் கட்டணம் | தவணைத் தொகைக்கான வழமையான வீதத்தைவிட 2% அதிகம். | தவணைத் தொகைக்கான வழமையான வீதத்தைவிட 2% அதிகம். |

கடன் வசதிகளுக்கான திருத்தங்கள் (மீள் நிரப்புதல்கள் (மிதப்புக் கடன்களுக்கு மட்டும்), மீளளிப்பு திகதி மாற்றம் உட்பட): ரூ.2,000

கார் கடன்களைப் பொறுத்தவரையில், மேற்குறிப்பிட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக, கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் ஓர் அடைமான ஒப்பந்தத்திற்கு ரூ.4,000/- என்ற அனைத்தும் உள்ளடங்கிய கட்டணமும் தெல்கந்த, ஹோமாகம மற்றும் கம்பஹா காணிப் பதிவகங்களில் பதிவு செய்யப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் ஓர் அடைமான ஒப்பந்தத்திற்கு ரூ.10,000/- என்ற அனைத்தும் உள்ளடங்கிய கட்டணமும் கொழும்பு, தெல்கந்த, ஹோமாகம மற்றும் கம்பஹா தவிர்ந்த ஏனைய காணிப் பதிவகங்களில் பதிவு செய்யப்படும் ஒப்பந்தங்கள் தொடர்பில் ஓர் அடைமான ஒப்பந்தத்திற்கு ரூ.11,500/- என்ற அனைத்தும் உள்ளடங்கிய கட்டணமும், பொருத்தமான முறையில், தொழில் நிபுணத்துவ சேவைக் கட்டணமாக அறவிடப்படும்.

உரிய காலத்திற்கு முன்பே கடன் தொகை முழுவதும் அல்லது அதிலொரு பகுதி செலுத்தப்படுவதாக இருந்தால், வாடிக்கையாளர் அத்தகைய முன்கூட்டிய மீளளிப்பு மற்றும்/அல்லது பகுதி மீளளிப்பு பற்றி எழுத்து மூலம் வங்கிக்கு முன்னறிவித்தல் கொடுக்க வேண்டும்.

**முன்கூட்டிய தீர்ப்பனவு/முன்கொடுப்பனவு கட்டணங்கள்:**

| | **தனிப்பட்ட கடன்கள்** | **கார் கடன்கள்** |
|---|---|---|
| மிதப்பு வட்டி வீதக் கடன்கள் | தீர்ப்பனவு செய்யப்படும் நிலுவைத் தொகையில் 3%, ரூ.10,000/- என்ற குறைந்தபட்ச கட்டணத்திற்கு அமைவாக. | தீர்ப்பனவு செய்யப்படும் நிலுவைத் தொகையில் 4%, குறைந்தபட்சம் ரூ.15,000/- அல்லது அதிகபட்சம் ரூ.25,500/- (இவற்றில் எது கூடியதோ அது) என்பதற்கு அமைவாக. |

**நிலையான வட்டி வீதம் (1 வருட நிலையான கடன்கள் உட்பட)** – முன்கூட்டிய/நேரகாலத்துடனான தீர்ப்பனவுகளுக்கான கட்டணம், தீர்ப்பனவு செய்யப்படும் நிலுவைத் தொகையில் 4%

கட்டணங்கள் மற்றும் அறவீடுகளின் முழு விபரங்களையும் அறிவதற்கு www.hsbc.lk என்ற இணையத்தளத்தில் கிடைக்கும் HSBC விதிப்பனவுப் பட்டியலைப் பார்க்கவும். கட்டணங்களும் அறவீடுகளும் வங்கியினி தற்றுணிபிற்கேற்ப எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் இல்லாமலே மாற்றப்படலாம்.

□ நான்/நாம் இக் கடனின் அம்சங்கள், செலவுகள் மற்றும் இடர்களை நன்கு ஆராய்ந்துள்ளதுடன், அது எனது/எமது தேவைக்குப் பொருத்தமானதென உறுதிசெய்கிறேன்/ உறுதிசெய்கிறோம்.

□ மேற்குறிப்பிட்ட கட்டணங்களும் அறவீடுகளும் வங்கியினி தற்றுணிபிற்கேற்ப எந்த நேரத்திலும் முன்னறிவித்தல் இல்லாமலே மாற்றப்படலாம் என்பதை நான்/நாம் ஏற்றுக்கொள்கிறேன்/ஏற்றுக்கொள்கிறோம்.

| | |
|---|---|
| ...................................... | ...................................... |
| பிரதான விண்ணப்பதாரரின் கையொப்பம் | கூட்டு விண்ணப்பதாரரின் கையொப்பம் |
| திதி மாமா வவவவ | திதி மாமா வவவவ |

நாம் வழங்கும் சேவைகள் குறித்து உங்களுக்குப் பூரண திருப்தி இல்லையெனின் அல்லது அச் சேவைகள் உங்கள் தேவையை ஈடுசெய்யவில்லையெனின், தயவுசெய்து இயன்றளவு விரைவாக பின்வரும் ஒரு வழியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:

- + 94 114 511 566 என்ற வாடிக்கையாளர் தீர்வுகள் உடனடித் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக

- customersolutions@hsbc.com.lk என்ற மின்னஞ்சல் முகவரி ஊடாக
- தபால் முகவரி: வாடிக்கையாளர் அனுபவம் மற்றும் உறவுகள் முகாமையாளர், வங்கியியல் மற்றும் செல்வ முகாமை, HSBC நிலையம், 525, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

நீங்கள் முன்வைக்கும் பிரச்சினைகளை உங்களுக்குத் திருப்தியளிக்கும் விதத்தில் தீர்த்துவைக்கவே நாம் எப்போதும் விரும்புகிறோம். எனினும், நீங்கள் நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு உங்கள் பிரச்சினைக்கு நிவாரணம் கோரவும் முடியும். ஆலாட்சி அதிகாரியின் தொடர்பு விபரங்கள் பின்வருமாறு:

- நிதித்துறை ஆலாட்சி அதிகாரியின் அலுவலகம் - இலங்கை, 143ஏ, வஜிரா வீதி, கொழும்பு 05.
- தொலைபேசி: + 94 112 595 625
- தொலைநகல்: + 94 112 595 624
- மின்னஞ்சல்: info@financialombudsman.lk
- இணையத்தளம்: www.financialombudsman.lk

மேலதிக விபரங்களுக்கு www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும்.

இந்த ஆவணத்தின் ஆங்கில மற்றும் சிங்கள பிரதிகள் தேவைப்படின், www.hsbc.lk என்ற வங்கியின் இணையத்தளத்தில் பிரவேசிக்கவும். அல்லது வங்கியின் கிளை ஒன்றில் கேட்டுப் பெறலாம்.

ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட் - ஸ்ரீலங்கா, இலங்கை மத்திய வங்கியினால் உரிமம் அளிக்கப்பட்டு மேற்பார்வை செய்யப்படும் ஒரு வர்த்தக வங்கியாகும்.

இது ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட், ஸ்ரீலங்காவின் வெளியீடு.

வாடிக்கையாளரின் ஒப்பம்